# தலையாய அறம்

***முனைவர் அ. பாக்கிய முத்து***
இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை தலைவர்
திருவள்ளுவர் கல்லூரி, பாபநாசம், திருநெல்வேலி

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: ஏப்ரல்**

**வருடம்: 2024**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS1-April.7715

***முன்னுரை***

*குறளில் அறத்தின் வேர் "அறன் வலியுறுத்தல்" அதிகாரம் அறத்தின் விழுதுகளைக் குறள் முழுவதும் காணமுடியும். தத்துவம் சார்ந்த அறம், நம்பிக்கை சார்ந்த அறம், சூழல் சார்ந்த அறம், எக்காலத்திற்கும் உரிய அறம் என அறங்கள் பலவாயினும், பகுத்துண்டு பல்லுயிரையும் வாழ வைப்பதுதான் நூல்கள் சொல்லிய அறங்களில் எல்லாம் தலையாய அறம்-நல்லறம் என்று வள்ளுவர் விடையும் விளக்கமும் தந்துள்ளார். மனத்தூய்மையே அறம் என்று சொன்னவர் பின்னர் பகிர்ந்து உண் பதைத் தலையாய அறம் என்கிறார்.*

***"பகுத்துண்டு பல்லுயிர் ஒப்புதல் நூலோர்***
***தொகுத்த வற்றுளெல்லாம் தலை" (குறள் 322)***

*மனித நேயமும் பகுத்துண்ணப் பொருளும் இருந்தால் பல உயிர்களை வாழ வைக்க முடியும். அன்பு சார்ந்த அறம் தான் உயர்ந்தது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.*

***வித்து***

*வள்ளுவர் மனத்தூய்மையே அறமாகும் என்று இலக்கணம் வகுத்தன்மைக்கு அடித்தளம் புறநானூறு. உங்களால் பிறர்க்கு நல்லது செய்ய முடியாவிட்டாலும் தாழ்வில்லை. பிறர்க்குத் தீங்கு நினையாமலும் செய்யாமலும் இருங்கள். அதுதான் எல்லாரும் விரும்பும் நல்லறம் என்றார் நரிவெரூஉத்தலையார்.*

***"நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்***
***அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்***
***எல்லாரும் உவப்பது அன்றியும்***
***நல்லாற்றுப் படுஉம் நெறியுமார் அதுவே"***

***(புறம் 195)***

*மனமாசற்ற நிலையைவிடப் பிறருக்காக வாழும் முறைமை உயரிய அறம் என்றார். இளம்பெரும்வழுதி, தன்னலம் துறந்து பொதுநலத்திற்காக வாழும் சான்றோர் இருப்பதால் உலக இயக்கம் நடக்கின்றது என்றுப் பாடி வைத்தார். அவர் வரும்,*

***"தமியர் உண்டலும் இவரே"***
***"தமக்கென முயலா தோன்றாள்***
***பிறர்க்கென முயலுநர் உண்மை யானே" (புறம் 188)***

*என்ற தொடர்கள் மனங்கொள்ளத் தக்கவை.*

**கைம்மாறு வேண்டா**

முடமோசியாரும் பரணரும் கைம்மாறு கருதாமல் எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் செய்யப்படும் அறம் ஒப்பில்லாத அறம் என்ற உண்மையை உணர்த்தினர். ஆய் என்ற பெயரையுடைய அரசன், இந்தப் பிறவியில் அறம் செய்தால் அது மறுபிறவியில் நன்மை பயக்கும் என்ற நம்பிக்கையோடு அறம் செய்யவில்லை என்கிறார் முடமோசியார். அவன் வியாபாரம் செய்யவில்லை என்கின்றார்.

**"இம்மை செய்தது மறுமைக்கு ஆம் எனும்
அறவிலை வணிகன் ஆய் அலன்"**

***(புறம் 134)***

ஆய் போலவே பெரும் பேகன் என்ற அரசனும் மறுப்பிறப்பில் நன்மை கிடைக்கும் என்ற எதிர்ப்பார்ப்போடு ஏழைகளுக்கு உதவி செய்தவன் அல்லன் என்கிறார் புரணர்.

**"........................... பேகன்
எத்துணை ஆயினும் ஈதல் நன்று என
மறுமை நோக்கியன்றோ அன்றே
பிறர், வறுமை நோக்கின்று அவன்
கைவண்ணமே"**

***(புறம் 141)***

தன் கைப் பொருள் குறைந்தாலும் அவன் கவலைப்பட்டதில்லை. மறுமையை நோக்காமல் வறுமையை நோக்கிப் பெரும் பேகன் அறம் செய்தான்.

**அறவிலை**

இங்கே மற்றொன்றையும் பார்க்க வேண்டும். வசதி படைத்தவர்களுக்குச் செய்யும் உதவிகளை நம் தமிழ்ச் சான்றோர் அறம் என்று கொள்ளவில்லை. அப்படிச் செய்வதை அறவிலை வணிகம் என்று சொன்னார் சீத்தலைச் சாத்தனார்.

**"ஆற்றுநர்க்கு அளிப்போர் அறவிலை பகர்வோர்"** ***(மணி 11:92)***

சங்கச் சான்றோரைப் பொருத்தமட்டில் மறுமை இன்பத்தை எதிர்பார்த்துச் செய்யும் அறமும் வசதி படைத்தவர்கள் செய்யும் அறமும் அறவிலை வணிகம்தான். அதே போல மறுபிறவியில் இன்பம் கிடைக்கும் என எதிர்பார்த்துச் செய்யும் உதவியும் "அறவிலை வணிகம்" தான் இவ்வாறு வள்ளுவருக்கு முன்பும் பின்பும் அறம் பற்றிய சிந்தனைகள் இருந்தனவெனினும், இன்னதுதான் அறம் என்ற விளக்கம் காணக் கிடைக்கவில்லை.

**அறம் யாது?**

அறம் என்பது ஒரு கருதுகோளா? கடவுளா? என்று கேட்டால் அது கடவுள் இல்லை. ஒரு கருதுகோள்தான். ஆதிமனிதனுக்கு அறம் பற்றிய சிந்தனை ஏதும் இல்லை. மனித நாகரிகமும் பண்பாடும் வளர்ந்தது. தீமைகளும் கூடவே வளர்ந்த பிறகுதான் அறக்கோட்பாடு உருவாகியிருக்க முடியும். வள்ளுவத்தை உள்வாங்கி அறத்தை இன்னது என்று விளக்கிக் காட்டுகின்றார் மு. வரதராசன். அறம் என்பது எண்ணமா? சொல்லா? செயலா? மூன்றுமேயாகும். மூன்றனுள்ளும் சொல்லுக்கும் செயலுக்கும் எண்ணமே அடிப்படை, ஆகையால் எண்ணத்தின் தூய்மையே முதன்மையானது மனமாக இன்மையே முதன்மையானது. அதுவே அறம் மனமாக நீங்காமல் செய்யும் செயலும் சொல்லும் வீண் ஆரவாரமானவை பொறாமை, ஆசை, சினம், கடுஞ்சொல் ஆகியவை இல்லாது நடப்பது அறமாகும். துறவறமாகிய தனி வாழ்க்கையில் அறத்தின் இயல்பை உணர்வதை விட இல்லறத்தில் அறத்தின் இயல்பை நன்கு உணரமுடியும். ஏனெனில் அன்புடன் வாழ்வதே இல்வாழ்க்கைப் பண்பு அறத்தைப் போற்றி வாழ்வதே இல்வாழ்க்கையின் பயன். இல்வாழ்க்கையில் இருப்பவனே வாழ முயல்கின்றவர்கள் எல்லோரிலும் தலைமையானவன். (டாக்டர் மு.வரதராசன், திருவள்ளுவர் அல்லது வாழக்கை விளக்கம் பக். 311-316)

### மனமே அறம்

மனமே மனிதன். ஓர் ஆலமரத்தைவிட ... சிற்றுயிரைவிட. ஓயாது உழைக்கும் எறும்பையும், வண்டைவிட, பறவையைவிட, மனிதனே சிறப்புடையவன் காரணம் அவனுக்குமனம்என்றநுண்பொருள்உண்டு. இதைப் பயன்படுத்தும் வல்லமையும் உண்டு.

**வள்ளுவர் மனம் பண்படும் வகையைக் காமத்துப்பாலிலும்**

**மனம்பயன்படும்பொதுவாழ்க்கையைப் பொருட்பாலிலும்,**

மனம் அறத்தைப் போற்றும் தன்மையை அறத்துப் பாலிலும் விளக்கியுள்ளார். (மேலது பக். 276-277) அறத்தாறு (குறள் 46) நல்லாறு (குறள் 222) என்ற வள்ளுவரின் சொல்லாடல்கள் நல்லறத்தோடு நேரடித் தொடர்புடையவை.

### ஒப்பீடு

தன்னலத் துறந்த நிலையினை அறம் என்று நிறுவி அதனை வாழை மரத்தின் வாழ்வோடு ஒப்பிட்டுரைக்கின்றார் அழகரடிகள்.

"வாழைமரம் குலைவிடுகின்ற வரை இலை தந்து வாழ்கிறது. குலைத்விடுவதற்காகவே அது அடுக்கடுக்காய் இலைவிட்டு வளர்ந்து வாழ்ந்ததாய்த் தெரிகிறது. விட்ட குலை முதிர்ந்தவுடன் தன் முயற்சியும் குறிக்கோளும் வெற்றி பெற்றதாய் எண்ணி உயிரை முடித்துக் கொள்ள அணியமாகின்றது. பிறர்க்காகக் குலையை வழங்கிவிட்டு வாழை உயிர்விடுகின்ற அந்த நிகழ்ச்சி, உருக்கம் தருகின்றது. அது இறந்த பின்னும் அதன் நடுத்தண்டைப் பிறர்க்கு உரியதாக்கி என்பும் உரியர் பிறார்க்கு (குறள் 72) என்ற உண்மையை உணர்த்துகின்றது". அறத்தின் வீறு வள்ளுவத்தில் விளக்கப்பட்டு உள்ளது. அறத்தின் இயக்கம் உணர்த்தப்பட்டுள்ளது. அறம் உயிர்களின் வாழக்கையில் அவற்றின் திருத்தத்திற்காகவும் நலத்திற்காகவும் பல்வேறு வகைகளில் பல்வேறு வடிவங்களில் பல்வேறு கருத்துக்களில் பல்வேறு நிலைகளில் இயக்கங் கொண்டு தன் ஆட்சியைச் செலுத்தி வருகின்றது. அதனால் "அறத்தாறு" என்றே ஒரு தனித்த அருளாட்சி முறை உலகத்தில் தடையின்றிக் காணப்படுகிறது என்கின்றார் அழகரடிகள் (திருக்குறள் அறம் பக். 63)

### பிறனில் விழையாமை-அறம்

ஆசைசே களவுக்கும் கொலைக்கும் பாலியல் வன்கொடுமைகளுக்கும் முதன்மைக் காரணம். தீய உணர்வு தோன்றத் திரைப்படம், அலைபேசி, இணையதளம், மது முறையற்ற ஆட்சி ஆகியன துணைக் காரணங்கள், பெண்ணாசையில் விளைந்த பாவங்களை அறிந்த வள்ளுவர், பிறர் மனைவியை ஆசையோடு பார்க்காத மனிதனைச் சான்றோன் என்றார். அறம் உடையவன் என்றார். இவ்வறம் இருபாலருக்கும் பொருந்தும் என்றாலும் ஆதிக்கவுணர்வு, வலிமை, உடற்கூறு ஆகிய காரணங்களால் ஆடவர்களே தவறும் செய்யும் இயல்பினர் என்பதை உணர்ந்த வள்ளுவர், பிறர் மனை நோக்காத பேராண்மையை ஆடவர்க்கேஉரியஅறமாக வலியுறுத்தியுள்ளார். பிறர்க்கு உதவுதல் அறம், அதனைவிடப் பிறன் மனைவியைப் பார்க்காமல் இருத்தல் பேரறம் என்ற உண்மையும் இங்கு பெறப்படுகின்றது.

### அறத்தை மறத்தல் கேடு

அறம்ஆக்கம் அதனை மறத்தலே கேடு. ஆதலால் இடையுறாது அறவினை செய்தல் வேண்டும். நாளைக்குச் செய்யலாம் என்று தள்ளிப் போடாதே. இறுதியில் செய்வோம் என்று எண்ணாதே, உடனே அறம் செய்க. நாள் வீண்படாமல் ஒவ்வொரு நாளும் அறம் செய்க. அறத்தான் வருவதே இன்பம். எனவே அறத்தைச் செய்ய மறந்துவிடாதே என்று வலியுறுத்துகின்றார் வள்ளுவர். எனவே மனத்தளவில் நிற்பதல்ல அறம் என்பதும் அதனைச் செயலில் காட்டுவதே அறம் என்பதும் அறத்தை மறந்து போவதால் கேடு வரும் என்பதும் வள்ளுவர் கண்ட மெய்ப்பொருள்களாம்.

*அறக்கடவுள் தண்டிப்பாரா?*

**"மறந்தும் பிறன்கேடு சூழற்க, சூழின்
அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு"**

***(குறள் 204)***

"அரசியல் பிழைத்தோருக்கு அறங் கூற்றாவதும்" (சிலம்பு, பதிகம்) என்றமையால் தீங்கு செய்தவரை அறக்கடவுள் தண்டிப்பார் என்று கொள்ளுகின்றனர். அது அறிவுப் பார்வை ஆகாது. அறவுணர்வு கொண்ட மக்களால், சட்டத்தால் தீங்கு செய்வோரும் ஆட்சியாளர்களும் தண்டிக்கப்படுவர் என்று பொருள் கொள்ள வேண்டும். உலக வரலாறு இவ்வுண்மையைக் காட்டுகின்றது.

*நிறைவுரை*

மனமாக இருப்பது அறம். பிறர்க்கு நல்லது செய்யாவிட்டாலும் கெடுதல் செய்யாமல் இருப்பது அறம். பிறர்க்கு உதவி வாழுதல் அறம். கைம்மாறு எதிர்பாராமல் செய்வது அறம். மறுமை இன்பத்தை நாடாமல் செய்வது அறம். வறியவர்க்கு ஈதல் அறம். துறவறத்தைவிட இல்லறத்தார் செய்வதே தலையாய அறம். பல உயிர்களும் வாழும்படி மனித நேயத்தோடு பகுந்துண்டு வாழ்வதே நூலோர் தொகுத்துக்காட்டிய அறங்களிலெல்லாம் உயர்ந்த தலையாய நல்லறமாகும் என்பதை இக்கட்டுரையின் வழி அறிய முடிகின்றது.